எழுநூத்திமங்கலம் கிராம ஊராட்சி தலைவர்/ செயல் அலுவலர்

அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு. R. செல்வன் அவர்கள்

தலைவர்

ந.க. எண். 1/2024-2025 நாள்: 28.06.2024

பொருள்: மனைப்பிரிவு வரன்முறை - ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், எழுநூத்திமங்கலம் ஊராட்சி, எழுநூத்திமங்கலம் "ஆ" கிராமம் நில அளவை எண்கள் 265, 267/3, 267/4C மற்றும் 267/5 ஆகிய காலைகளில் உள்ள 16.85 ஏக்கர் (68189.52ச.மீ) பரப்பில் அமைந்த மனைப்பிரிவில் உள்ள 334 மனைகளை வரன்முறைப்படுத்தி அங்கீகாரம் வழங்கல் தொடர்பாக

பார்வை:

1.மனுதாரரின் மனைப்பிரிவிற்கான ONILINE விண்ணப்பம் SBRR46PS/2023 நாள்:08.08.2023

2. ONILINE விண்ணப்பம் SBRR46PS/2023 நாள்:08.08.2023 இதற்கு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் நகர ஊரமைப்புதுறை அவர்களின் ஆய்வரிக்கை

3. ONILINE விண்ணப்பம் SBRR46PS/2023/TCP3, நாள்:01.09.2023

4. மனுதாரர் A.பழனிச்சாமி மற்றும் மூவரின் சாலை பூங்கா, பொது உபயோகம் ஆகிய இடங்களை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த ஆவண எண்.1659/2023 நாள் 15.09.2023தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை ஆவணஎண். 1660/2023 நாள்: 15.09.2023.

5. அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ 4(3) துறை நாள்:04.06.2004.

6. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை நாள் 04.02.2019.

7. அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை நாள் 31.01.2020.

8. அரசாணை எண். 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ 4 (3) துறை நாள் 23.09.2020.

9. அரசாணை எண். 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ 4 (3) துறை நாள் 09.02.2020.

10. அரசு கடிதம் எண். 19113/நவ 4(3)/2017- 1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 30.08.2017.

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1 நாள் 08.09.2017.

உத்தரவு

மனைப்பிரிவு வரன்முறை- ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், எழுநூத்திமங்கலம் ஊராட்சி, எழுநூத்திமங்கலம் "ஆ" கிராமம் நில அளவை எண்கள் 265, 267/3, 267/4C மற்றும் 267/5 ஆகிய காலைகளில் உள்ள 16.85 ஏக்கர் (68189.52ச.மீ) பரப்பில் அமைந்த மனைப்பிரிவில் உள்ள 334 மனைகளுக்கு பார்வையில் காணும் அரசாணைகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.இ.எண். 86/2023ன்படி தொழில்நுட்ப அளவிலான (TECHNICAL APPROVAL) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட 334 மனைகளுக்கு வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் தொகையை உரிய அரசு தலைப்பில் ரூ.2,52,750/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்) (E.CHALLAN NO:20240624009617 நாள்:24.06.2024) செலுத்தப்பட்டுள்ளது. மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு

மனைக்கும் ரூபாய் 1000/- வீதம் 334 மனைகளுக்கு 3,34,000/-(ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்திநான்காயிரம் மட்டும்), கூராய்வு கட்டணம் ரூ.1000/- ஆகியவை ஊராட்சி பலவகை வரவு இரசீது எண். 2024-2025/10/3/4/7/28

க.ச எண்.	வுழிகாட்டி மதிப்பு 1 ஏக்கர்	ஆவண எண்.	வுழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம்
265, 267/3, 267/4C மற்றும் 267/5 ஆகிய காலைகளில் உள்ள 16.85 ஏக்கர்	ரூபாய் 5,00,000/- 16.85X5,00,000 =ரூ.84,25,000/-	806/2023	ரூ.2,52,750/-

எனவே மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டுள்ளதாலும் ஈரோடு ஊரமைப்பு இணைஇயக்குநர்/துணைஇயக்குநர் (பொ) அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வரைபடத்தில் உள்ளபடி மனைப்பிரிவு சாலை 19,513.54 சதுரமீட்டர், உள்ளாட்சிக்கான பூங்கா பரப்பு 4928.67 சதுரமீட்டர். பொதுஉபயோகப்பரப்பு 313.08 சதுரமீட்டர். பரப்பளவு மின்பகிர்மானத்திற்கு பொது உபயோகப்பரப்பு (TANGEDCO) 267.96 சதுரமீட்டர் பரப்பளவை ஈரோடு கொடுமுடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1659/2023, 1660/2023 நாள்:15.09.2023ன் படி ஊராட்சிக்கு தானக் கிரையமாக வழங்கப்பட்டுவிட்டதாலும் எழுநூத்திமங்கலம் கிராமம் க.ச எண். 265,267/3, 267/4C, 267/5ல் உள்ள 16.85 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அளவிலான ஒப்புதல் (TECHNICAL APPROVAL) வழங்கி உத்தரவிடப்பட்டதால் 334 குடியிருப்பு மனைகளை வரன்முறைப்படுத்தி மனையிட அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

பார்வை 1 முதல் 11வரையிலான அரசாணை மற்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகள், மற்றும் எழுநூத்திமங்கலம் ஊராட்சி மன்றத்தில் நாள்:28.06.2024 அன்று நடத்தப்பட்ட ஊராட்சிமன்ற கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மான எண். 73 ல் உள்ள அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த உத்தரவு வழங்கப்படுகிறது.

R. சிவன்

PRESIDENT
Elunoothimangalam Panchayat
KODUMUDI UNION

தலைவர்

எழுநூத்திமங்கலம் ஊராட்சி

இணைப்பு:

நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடித நகல் மற்றும் வரைபட நகல்.

பெறுநர்:

A. பழனிசாமி மற்றும் மூன்று நபர்கள்.

9/159. மேட்டுப்பாறை, மருதுறையான்வலசு (po),

திருப்பூர் வழி.

நகல்:

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்படுகிறது.

2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு.

3. சார்பதிவாளர் அலுவலகம், கொடுமுடி.

4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) கொடுமுடி.